# புகையிரதத்தில் பொருட்களை கொண்டு செல்லும் மொத்த வாடிக்கையாளர்களை பதிவு செய்வதற்கான அறிவிப்பு!

*செழிப்பு தொலைநோக்கு கொள்கை அறிக்கையின்படி, பேரளவு (bulk) சரக்கு போக்குவரத்து மூலம் ஏற்படும் சுற்றுச்சூழல், சமூக மற்றும் பொருளாதார நன்மைகளை கருத்தில் கொண்டு, ரயில் மூலம் சரக்குகளை போக்குவரத்து ஊக்குவிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*

*இந்த திட்டத்தின் கீழ் மொத்தமாக பொருட்களை கொண்டு செல்லும் நிறுவனங்கள் புகையிரத திணைக்களத்தில் பதியும் அதேவேளை பதிவுசெய்த பிறகு பொருத்தமான நிறுவனங்களுக்கு மொத்தமாக பொருட்களை அனுப்ப போக்குவரத்து வசதிகளை வழங்குவது புகையிரத திணைக்களத்தின் நோக்கமாகும்.*

*மேலும் இங்கு கொண்டு செல்லப்படும் பொருட்களை வைத்திருப்பதற்காக ரயில்வே குதங்கள் மற்றும் ரயில் நிலைய நிலப்பகுதிகள் கட்டண அடிப்படையில் கொடுக்கப்படவும் வாய்ப்புள்ளது.*

*ரயில்வே திணைக்களத்துடன் இணைந்து மொத்த சரக்கு போக்குவரத்துக்கு உங்கள் நிறுவனம் விரும்பினால் புகையிரத திணைக்களத்தின் இணையதளத்திற்கு (www.railway.gov.lk) உள்நுழைந்து விண்ணப்ப படிவம் மற்றும் விவரங்களைப் பெற்று marketing.slr@hotmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை அனுப்பி பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கவும். அவ்வாறு செய்ய முடியாத நிறுவனங்கள் விண்ணப்ப படிவம் மற்றும் விவரங்களைப் பெற பின்வரும் வழிகளில் ஏதேனும் ஒரு எழுத்துப்பூர்வ கோரிக்கையை சமர்ப்பிக்கவும்.*

1. *துணை அத்தியேட்சகர் (வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல்), வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு, புகையிரத தலைமையகம், கொழும்பு 10 எனும் முகவரிக்கு எழுத்துப்பூர்வ கோரிக்கையை அனுப்பி வைப்பதன் மூலம்*
2. *கோரிக்கையை 0112-431909 என்ற இலக்க FAX இற்கு அனுப்புவதன் மூலம்*
3. *கோரிக்கையை marketing.slr@hotmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதன் மூலம்*

*முன்னுரிமை ஆரம்ப விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.*

*பிரதி பொது முகாமையாளர் (வாணிப)*